**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 17.6.2025                நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு கனடாவின் கனநாஸ்கிஸ் நகரில் ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.
- முன்னேறிய இந்தியா என்பது, வலுவான அறிவுசார் பொருளாதாரத்தால் எட்டத் தகுந்த இலக்கே தவிர, வெறும் கனவல்ல என்று, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்
- இந்தியாவின் தேசிய கல்விக் கொள்கை, உலகிலேயே சிறந்த கொள்கையாக திகழ்வதாகவும் குடியரசு துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.
- ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று அரியானா மாநிலம் மானேசரில், நாட்டின் மிகப் பெரிய கதிசக்தி மல்டி-மோடல் சரக்கு போக்குவரத்து முனையத்தை திறந்து வைத்தார்.

***<u>ே□ாடி-கனடா</u>***

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு கனடாவின் கனநாஸ்கிஸ் நகரில் ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார். இதற்கென அவர் 2 நாள் பயணமாக, இன்று கனடாவின் கால்கரி நகரை சென்றடைந்துள்ளார். ஜி-7 உச்சி மாநாட்டில், எதிர்கால எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு பற்றிய விவாதங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார். ஜி-7 நாடுகள் மற்றும் இதர அழைப்பு நாடுகளின் தலைவர்களையும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையும்

அவர் சந்தித்து, உலகின் முக்கிய பிரச்சனைகள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறார். கனடா பிரதமர் திரு மார்க் கார்னி உள்ளிட்ட தலைவர்களுடன் இருதரப்பு கூட்டங்களையும் அவர் நடத்த இருக்கிறார். பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து 6-ஆவது முறையாக ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதும், 18 லட்சம் இந்தியர்கள் வாழும் கனடாவிற்கு கடந்த 2015-ஆம் ஆண்டு முதன் முறையாக மேற்கொண்ட பயணத்தைத் தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், முக்கிய கூட்டாண்மை நிலைக்கு உயர்ந்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

<u>செவ்வாய்-பதினோராம் ஆண்டு</u>

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி, சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், நவீன மருத்துவ வசதிகளை குறைந்த கட்டணத்தில் அனைவருக்கும் வழங்குவதில் முக்கிய கவனம் செலுத்தப்படுவது குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு….

(வாய்ஸ்)

<u>செவ்வாய்-பதினோராம் ஆண்டு</u>

(வாய்ஸ்)

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் மருத்துவக் கட்டமைப்பு, குறிப்பிடத் தகுந்த அளவில் மாற்றமடைந்துள்ளது. ஆயுஷ்மான் பாரத் போன்ற முன் முயற்சிகளால், 55 கோடி மக்களுக்கு நிதிப் பாதுகாப்பு கிடைத்துள்ளது. ஆயுஷ்மான் வய வந்தனா திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு வசதிகள், 70 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதில் உள்ள, மூத்த

குடிமக்கள் அனைவருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் கீழ் மக்களுக்கான மருத்துவ சேவைகள் நவீனமாக்கப்பட்டுள்ளன. தனிபட்ட நபர்கள் தங்களின் மருத்துவ ஆவணங்களை எளிதில் அணுக ஏதுவாக, 78 கோடிக்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகள் தொடக்கப் பட்டுள்ளன. பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்தின் கீழ் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் வேகமாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள அசாமின் முதலாவது எய்ம்ஸ் மருத்துவமனை உட்பட நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை தொடக்கப்பட்டதும், விரிவாக்கம் செய்யப்பட்டதும் தரமான கல்வி மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில், அரசுக்குள்ள

<u>செவ்வாய்-பதினோராம் ஆண்டு</u>

உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இந்தியா துணிச்சலான பல்வேறு நடவடிக்கைகளை முன் கூட்டியே மேற்கொண்டது. நாட்டில் முதலாவது தொற்று கண்டுபிடிக்கப்பட்டதற்கு முன்பாகவே விமான நிலையங்களில் மருத்துவ பரிசோதனைகள் தொடக்கப்பட்டு, முகக் கவசம் அணிவதும் கட்டாயமாக்கப்பட்டது. நாடு முழுவதும் உடனடியாக பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு, தடுப்பூசி பணிக்குழுவும் அமைக்கப்பட்டது. கோ-வின் இணையதளத்தின் உதவியுடன் மக்களுக்கு 220 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டன. இ-சஞ்சீவினி தொலை நிலை வசதி மூலம் மக்கள் வீட்டிலிருந்தே மருத்துவ ஆலோசனைகளை பெற முடிகிறது. சுகாதாரத் துறையில் கடந்த 11 ஆண்டுகளில் ஏற்பட்ட இத்தகைய விரிவான மாற்றங்களால், தரமான மருத்துவ வசதிகளை, எளிய முறையில் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில், முன் எப்போதும் இல்லாத முன்னேற்றங்களை நாடு எட்டி உள்ளது.

தன்கர்

முன்னேறிய இந்தியா என்பது, வலுவான அறிவுசார் பொருளாதாரத்தால் எட்டத் தகுந்த இலக்கே தவிர, வெறும் கனவல்ல என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவர்களுடன் கலந்துரையாடல் நடத்திய அவர் விக்சித் பாரத் என்னும் இலக்கை நோக்கி நாட்டை நகர்த்துவதில் இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் பங்கு மிக முக்கியமானது என்றும் கூறினார்.

சமத்துவமின்மையை போக்கி அனைவரையும் சமன்படுத்தக் கூடிய மிகப் பெரிய கருவி கல்வி தான் என்று குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார். ஆயினும் கல்வியில் வணிகமயம் அதிகரிப்பது நல்லதல்ல என்றும், நாடு, பாரம்பரியமான குருகுலக் கல்வி முறையின் மாண்புகளுக்கு திரும்புதல் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். கார்ப்பரேட் உள்ளிட்ட வர்த்தக துறையினர் நாட்டின் கல்வி கட்டமைப்பில் முதலீடு செய்ய வேண்டும் என்றும் சிஎஸ்ஆர் நிதியை ஒருங்கிணைத்து உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தியாவில் ஸ்டார்ட்-அப் சூழல் எழுச்சி பெற்று வருவதை திரு ஜெகதீப் தன்கர் சுட்டிக்காட்டி உலகிலேயே யூனிகார்ன் நிறுவனங்களின் எண்ணிக்கை இந்தியாவில் தான் அதிகம் என்பது நம் அனைவருக்கும் பெருமை என்றார். நீல பொருளாதாரம் முதல், விண்வெளி பொருளாதாரம் வரையிலும், ஆராய்ச்சி முதல் புதுமையாக்கம் வரையிலும், இந்திய இளைஞர்களுக்கு பல வாய்ப்புகள் கொட்டி கிடப்பதாக அவர் தெரிவித்தார். இளைஞர்களுக்கு கை கொடுக்கும் அரசின் சாதகமான கொள்கைகளை, மேலும் பல இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் அவர் கூறினார்.

தேசிய கல்விக் கொள்கை, உலகிலேயே சிறந்த கொள்கையாக திகழ்வதாகவும், பல வித படிப்புகளைப் பயின்று, திறமை, நேரம் மற்றும் உள்ளாற்றலை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை

மாணவர்களுக்கு வழங்கும் வகையிலான நெகிழ்வுத் தன்மை, இக்கொள்கையில் இருப்பதாகவும் குடியரசு துணைத் தலைவர் பாராட்டினார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில் ……………..

(வாய்ஸ்-தன்கர்)

தற்போது உலகிலேயே, வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள நாடு இந்தியா தான் என்றும் சமூக நல்லிணக்கம், குடும்ப அறிவொளி, சுற்றுச் சூழல் உணர்வு, சுயசார்பு, குடிமை பொறுப்புணர்வு ஆகிய நாகரீக மரபுகளின் அடிப்படையில் இந்தியா முன்னேறி வருவதாகவும் குடியரசு துணைத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு செல்வகணபதி-திரு வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் திரு பிரகாஷ் பாபு ஆகியோரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து புதுச்சேரி பயணத்தை முடித்துக் கொண்டு புதுடெல்லிக்கு புறப்பட்ட குடியரசு துணைத் தலைவரை துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர் வழி அனுப்பி வைத்தனர்.

**<u>வைஷ்ணவ்</u>**

ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று அரியானா மாநிலம் மானேசரில், நாட்டின் மிகப் பெரிய கதிசக்தி மல்டி-மோடல் சரக்கு போக்குவரத்து முனையத்தை திறந்து வைத்தார். நாட்டில் 108 இடங்களில் மல்டி- மோடல் சரக்கு போக்குவரத்து முனையங்கள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரத் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். நடைமுறைகளை எளிமைப் படுத்தும் வகையில், 2021-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாகவே குறைந்த காலத்தில்

இதை சாதிக்க முடிந்திருப்பதாக அவர் கூறினார். ரயில்வே துறையிலும் சுத்தம்-சுகாதாரத்தை மேம்படுத்தி தரத்தை உயர்த்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு வைஷ்ணவ் கூறினார். கடந்த ஆண்டில் இந்தியாவின் ரயில்வே துறை 720 கோடி பயணிகளையும், ஆயிரத்து 600 மில்லியன் டன் சரக்குகளையும் கையாண்டு, உலக அளவில் 2-ஆவது இடத்திற்கு உயர்ந்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

*__வானிலை__*

தமிழகத்திலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் வரும் 23-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் கனமழைக்கும், நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு வங்க தேசத்தை ஒட்டி இன்று காலை உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக் கூடும் என்றும், குஜராத்தை ஒட்டி இன்று காலை உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடக்கு திசையிலும் நகரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள வங்க கடல் பகுதிகள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.